OS. 76/2022

நாள். 20.11.2025

பி.வா.சா.1 – தங்கவேலு

வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

அசல் வழக்கு எண்.70/2014 ல் நான், முருகேசன், வேலம்மாள் ஆகியோர்கள் வாதிகள் என்றால் சரிதான். அந்த வழக்கில் பிரதிவாதிகள் காளி மற்றும் பாலசுப்ரமணியம் என்றால் சரிதான். அந்த வழக்கில் கண்ட வாதிகளும், 1ம் பிரதிவாதி காளியும் உடன் பிறந்தவர்கள் என்றால்சரிதான். 2ம் பிரதிவாதி பாலசுப்ரமணியம் என் உடன் பிறந்த முனியாண்டியின் மகன். அந்த வழக்கில் பிரதிவாதிகள் ஆஜராகவில்லை என்பதால் ஒருதலைபட்சமாக தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் இறந்துபோன கருங்கம்மாளுக்கு நானும், முருகேசன், வேலம்மாள், காளி, பாலசுப்ரமணியம் ஆகியோர்கள் வாரிசுகள் என விளம்புகைசெய்யக்கேட்டு பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் கேட்டுள்ள பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோன கருங்கம்மாளின் சொத்துக்களுக்கு நாங்கள் வாரிசுகள் என விளம்புகை கேட்டு வழகது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.70/2014 வழக்கில் கருங்கம்மாளுக்கு பாத்தியப்பட்ட இவ்வழக்கில் கண்ட தாவா சொத்துக்களுக்கு நாங்கள் வாரிசுகள் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 4 ஆவணம் நீக்கி கருங்கம்மாளின் சொத்துக்களுக்கு நாங்கள்தான் வாரிசுகள் என்பதற்கு நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இல்லை என்றால் சரிதான். கருங்கம்மாளுக்கு வாரிசுகள் என வாங்கிய பி.வா.சா.ஆ–4 ஆவணத்தின் அடிப்படையில் இராமநாதபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கருங்கம்மாள் பெயரில் உள்ள சொத்துக்களுக்கு பட்டா மாறுதல் கேட்டு மனு கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த மனுவின் அடிப்படையில் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து எங்களுக்கு அனுப்பப்பட்ட

அறிவிப்பு நகல் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கருங்கம்மாளின் சொத்துக்களுக்கு எங்கள் பெயரில் பட்டா மாறுதல் செய்தவற்கு முன்பாக 1 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எந்தவித அறிவிப்பும் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து வாதி மற்றும் 1 முதல் 9 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர்களுக்கு தெரியாமலேயே பி.வா.சா.ஆ.4 தீர்ப்பை பெற்று, அதன் பின்பாக பட்டா மாறுதல் நடவடிக்கைக்கு விரோதமாக தாவா சொத்துக்களை பொறுத்து எங்கள் பெயரில் ஏற்படுத்திக்கொண்ட பட்டா செல்லத்தக்கதல்ல என்றும், வாதி மற்றும் 1 முதல் 9 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. வாதி மற்றும் 1 முதல் 9 பிரதிவாதிகளை அசல் வழக்கு எண்.70/2014 ல் தரப்பினர்களாக சேர்க்காமல் பெற்ற தீர்ப்பும் செல்லாது, கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.70/2014 ல் தரப்பினர்களாக உள்ள மற்ற நபர்களை நான் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்க இருக்கிறேனா என்றால் இல்லை. மோசடியாக அசல் வழக்கு எண்.70/2014 ல் தீர்ப்பு பெற்றுள்ளதால்தான் நாங்கள் அவர்களை விசாரிக்க தயாராக இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.